இந்து சமய அறநிலையத்துறை

அனுப்புநர்

ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப.,
ஆணையர்
சென்னை–34

பெறுநர்

1. அனைத்து இணை ஆணையர்கள்
2. அனைத்து இணை ஆணையர்/ செயல் அலுவலர்கள்
3. அனைத்து துணை ஆணையர்/ செயல் அலுவலர்கள்
4. அனைத்து உதவி ஆணையர்கள்
5. அனைத்து உதவி ஆணையர்/ செயல் அலுவலர்கள்

சுற்றறிக்கை ந.க.எண்.31154/2010/எம்.3/ நாள் 27.01.2022

அய்யா/அம்மையீர்,

பொருள்: அறநிறுவனங்களுக்கு சொந்தமான அசையாச் சொத்துக்களுக்கு கேட்பு, வசூல், நிலுவை விவரங்கள் கணினியில் பதிவேற்றம் செய்தல் மற்றும் வசூல் குறியீடு நிர்ணயம் செய்தல் குறித்து அறிவுரை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை: 1) இவ்வலுவலக சுற்றறிக்கை ந.க.எண். 31154/10/ எம்.3/ நாள.07.08.2021
2) இவ்வலுவலக சுற்றறிக்கை ந.க.எண். 31154/10/ எம்.3/ நாள் 19.08.2021, 31.08.2021, 06.10.2021, 22.10.2021, 27.10.2021 மற்றும் 20.11.2021

அறநிறுவனங்களுக்குச் சொந்தமான அசையாச் சொத்துக்களுக்கு எழுப்பப்படும் கேட்பினை முறையாக வசூல் செய்யவும், அதில் ஒளிவுமறைவு அற்ற வகையில் அமையும் வண்ணம் 08.10.2021 அன்று மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்களால் திருக்கோயில் கேட்பு வசூல் நிலுவை பதிவேடு விவரம் கணினி மயமாக்கப்பட்டுள்ளதை துவக்கி வைக்கப்பட்டு உள்ளது. இதன் மூலம் அறநிறுவனங்களின் அசையாச் சொத்துக்களுக்கு குத்தகைதாரர்/ வாடகைதாரர்களால் செலுத்த வேண்டிய குத்தகை/ வாடகை தொகையினை இணைய வழியில் செலுத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அதற்கேற்ப, அனைத்து அறநிறுவனங்களிலும் அச்சடித்த ரசீது வழங்கும் முறையினை 31.10.2021 உடன் ரத்து செய்யப்பட்டுள்ளதால், ஏற்கனவே பார்வையில் கண்ட கடிதங்கள் மூலம் அனைத்து அறநிறுவனங்களின் கேட்பு

Verified by RealEstate™

வசூல் நிலுவை குறித்த விவரங்களை விடுதல் இல்லாமல் கணினியில் முழுமையாக பதிவேற்றம் செய்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட W.P.No.28961/2018-ல். 02.11.2018 அன்று வழங்கிய உத்தரவின்படி, இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள அறநிறுவனங்களுக்குச் சொந்தமான அசையாச் சொத்துக்களில் வசூல் செய்யப்பட வேண்டிய நிலுவை தொகை விவரத்தை, இரண்டு வாரகாலத்திற்குள் தாக்கல் செய்திட உத்தரவிடப்பட்டிருந்தது. இவ்வழக்கானது மீண்டும் விரைவில் விசாரணைக்கு வரப்பெறவுள்ளது.

அனைத்து அறநிறுவனங்களின் 31.10.2021 வரையிலான காலத்திற்குரிய கேட்புவசூல் நிலுவை விவர அறிக்கை இவ்வலுவலகத்தில் பெறப்பட்டு தொகுக்கப்பட்ட விவரப்படி கேட்பு ரூ.2530.60 கோடியாக உள்ளது. மேலும், இணையதள வழியில் சார்நிலை அலுவலர்களால் பதிவேற்றம் செய்யப்பட்ட கேட்பு வசூல் நிலுவை விவரப்படி ரூ.2193.29 கோடியாக உள்ளது. எனவே, இந்த முரண்பாட்டை நேர்செய்யும் வகையில் அனைத்து சார்நிலை அலுவலர்களும் தத்தம் அறநிறுவனங்களின் கேட்பு வசூல் நிலுவை விவரங்களை எவ்வித விடுதலுமின்றி சரியாக 15.02.2022-க்குள் பதிவேற்றம் செய்திட வேண்டுமென அறிவுறுத்தப்படுகிறது.

மேலும், அறநிறுவனங்களுக்குச் சொந்தமான அசையாச் சொத்துக்களின் மொத்த கேட்புத் தொகையில், 1431-ம் பசலிக்கு, மண்டல இணை ஆணையர் வாரியாக கீழ்க்கண்டவாறு குறியீடு நிர்ணயம் செய்யப்படுகிறது. 30.06.2022-க்குள் இக்குறியீட்டின்படி பணி முன்னேற்றம் எய்தி முடித்திட வேண்டுமென அறிவுறுத்தப்படுகிறது.

வ. எண்.	மண்டல இணை ஆணையர் விவரம்	1431-ம் பசலிக்கான குறியீடு (ரூபாய் கோடியில்)
1.	சென்னை-1	101
2.	சென்னை-2	126
3.	காஞ்சிபுரம்	26
4.	வேலூர்	10
5.	விழுப்புரம்	2
6.	திருவண்ணாமலை	12
7.	கடலூர்	13
8.	நாகப்பட்டினம்	53
9.	திருச்சிராப்பள்ளி	21
10.	தஞ்சாவூர்	24
11.	மயிலாடுதுறை	78

Verified by RealEstate

வ. எண்.	மண்டல இணை ஆணையர் விவரம்	1431–ம் பசலிக்கான குறியீடு (ரூபாய் கோடியில்)
12.	சேலம்	5
13.	ஈரோடு	4
14.	திருப்பூர்	3
15.	கோயம்புத்தூர்	3
16.	திண்டுக்கல்	9
17.	மதுரை	13
18.	சிவகங்கை	6
19.	திருநெல்வேலி	29
20.	தூத்துக்குடி	17
	மொத்தம்	555

இத்துறை கட்டுப்பாட்டில் உள்ள அறநிறுவனங்களுக்குச் சொந்தமான மொத்த சொத்துக்கள் 3,65,667 இனங்கள் உள்ளன. அதில், 98,596 இனங்கள் குத்தகை / வாடகைக்கு விடப்பட்டு வருமானம் ஈட்டப்பட்டு வருகிறது. மீதமுள்ள 2,67,071 இனங்களானது எவ்வித வருவாயும் ஈட்டப்படாமல் உள்ளது. இதனால் அறநிறுவனங்களுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டு வருகிறது.

எனவே, வருகிற 31.03.2022–க்குள் வருவாய் ஈட்டப்படாத இனங்களை அறநிறுவனங்கள் வாரியாக கண்டறிந்து அவற்றை குத்தகை / வாடகைக்கு வழங்கி திருக்கோயிலுக்கு வருவாய் ஈட்டிடும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொண்டு முடிக்கப்பட வேண்டுமென அனைத்து சார்நிலை அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது.

இச்சுற்றறிக்கை விவரத்தை தங்களது ஆளுகையின் கீழ் உள்ள அனைத்து அறநிறுவனங்களின் நிர்வாகிகள்/செயல் அலுவலர்களுக்கு தெரிவித்திட வேண்டுமெனவும் மற்றும் இச்சுற்றறிக்கையினை பெற்றுக் கொண்டமைக்கு உடன் ஒப்புதல் வழங்கிடவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்./–ஜெ.குமரகுருபரன்
ஆணையர்

/உ.ந.உ.ப./

தனி அலுவலர் (ஆ.நி.–1)/
மாவட்ட வருவாய் அலுவலர்

27.1.2022

Verified RealEstate ™